Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 265

சனிக்கிழமை
17 ஒகஸ்ட் 2024

ஆவணி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"ஒரு தேர்தலை நடத்தவே இவ்வளவு பாடு. அதுக்குள்ள அடுத்த தேர்தலோ"



# பொதுத்தேர்தலை நடத்தவும் தயார்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

**கொழும்பு, ஒகஸ்ட் 17**

**புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி, நாடாளுமன்றத்தைக் கலைத்தால் இந்த வருடத்தில் பொதுத்தேர்தலை நடத்தவும் நாம் தயாராக உள்ளோம் என்று இலங்கைத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.**

☞ 11

## ரணிலுக்கு ஆதரவாக புதிய கூட்டு உதயம்

கொழும்பு, ஓக. 17

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக 34 அரசியல் கட்சிகள் இணைந்து 'இயலும் ஸ்ரீலங்கா' எனும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

☞ 11

## தேர்தல் பரப்புரையின் நிதிமூலங்கள் எவை?

கொழும்பு, ஓக. 17

தேர்தல் பரப்புரைக்கான நிதி எப்படிக் கிடைக்கின்றது என்பது உள்ளிட்ட விவரங்களை ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் வெளியிடவேண்டும் என இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

☞ 11

## மைத்திரி நடுநிலை

கொழும்பு, ஓக. 17

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்கும் முடிவை தான் இன்னமும் எடுக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தன்னைத் தொடர்புபடுத்தி சில கட்சிகளும், அரசியல் பிரமுகர்களும் வெளியிட்டுவரும் கருத்துகளையும் அவர் அறிக்கையொன்றின் ஊடாக நிராகரித்துள்ளார்.

அதேவேளை, மைத்திரிபால சிறி

☞ 11

## மின்சாரம் தாக்கி இளைஞர் இறப்பு

வவுனியா, ஓக. 17

மின்வேலியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். பத்மநாதன் டயான் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரி

☞ 11



## இளைஞனின் படுகொலைக்கு நீதிகோரி மக்கள் ஆவேசம்!

முல்லைத்தீவு, ஓக. 17

கனடாவுக்குச் செல்லத்தயாரான இளைஞர் ஒருவர், கடந்த 29 ஆம் திகதி முல்லைத்தீவு - வவுனிக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்த நிலையில், அவருடைய இறப்புக்கு நீதிகோரி நேற்றுப் போராட்டங்கள் இடம்பெற்றன.

☞ 11

## கீரிமலை கிருஷ்ணர் ஆலயத்தில் நீண்ட நாள்களின் பின் வழிபாடு!



யாழ்ப்பாணம், ஓக. 17

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பகுதியில் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த கீரிமலை கிருஷ்ணர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள நேற்று வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டப் பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், தெல்லிப்பழைப் பிரதேச

☞ 11

## இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 17

40 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்

☞ 11

## புலிகளின் புதையல்களை தேடும் முயற்சி தோல்வி!

முல்லைத்தீவு, ஓக. 17

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் புதையலைத் தேடும் முயற்சிகள் நேற்றுத் தோல்வியில் முடிந்துள்ளன.

புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, புதுக்குடியிருப்பு - மந்துவில் பகுதியிலுள்ள தனியார் காணியில், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபனின் மேற்பார்வையில் இந்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர், கிராம சேவையாளர் மற்றும் துறைசார் அதிகாரிகளும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

☞ 11

## செட்டிகுளத்தில் வாள்வெட்டு; நான்கு பேருக்குப் படுகாயம்!

வவுனியா, ஓக. 17

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் மர்ம நபர்கள் மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் நான்கு பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

செட்டிகுளம் - மெனிக்பாம் பகுதியில் நேற்றுப் பின்னிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

☞ 11

## காஷ்மீர், லடாக் போல் கச்சதீவு விவகாரமும்!

### தமிழக ஆளுநர் ரவி அபத்தப் பேச்சு



கொழும்பு, ஓக. 17

கச்சத்தீவு உரிமையை விட்டுக் கொடுத்ததால் எமது மீனவர்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது - என்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சுதந்திர தினத்துக்கு முன்னைய நாள் (ஓகஸ்ட் 14) தேசப்பிரிவினை கொடூரங்களின் நினைவுதினமாக இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகின்றது. இது தொடர்பான நிகழ்வொன்றில்

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அநுரகுமாரவை இலக்குவைத்து

# இணக்கப்பாட்டுப் பரப்புரை ரணில் - சஜித் கூட்டணி!

**கொழும்பு ஓக.17**

**ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அணியும் சஜித் பிரேமதாஸ அணியும் அநுர தரப்பை இலக்குவைத்து பரப்புரைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இணக்கப்பாடுடைய பரப்புரை நடைமுறையின் மூலம் இரு அணிகளும் சாதகமான வெற்றியை நோக்கி நகர்வதாக அரசியல் வட்டாரங்களில் பேசுபொருளாகியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அல்லது சஜித் பிரேமதாஸ இருவரில் யார் வெற்றி பெற்றாலும் அது அவர்கள் இருவருக்கும் சாதகமான பிற்கால அரசியல் நகர்வையே வகுக்கும்.

அதன் அடிப்படையில், இரண்டாவது விருப்பு வாக்கை குறிவைத்து ஒரு பரப்புரை நடத்துவதே இரு அணிகளினதும் நோக்கம்.

தற்போதைய அரசியல் ஓட்டத்தின் படி எந்த வேட்பாளரும் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற முடியாது என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் சஜித் மற்றும் ரணில், தரப்புகளுக்கு இருக்கும் ஒரே வழியாக இரண்டாவது விருப்பு வாக்கு காணப்படுகிறது.

இரண்டாவது விருப்பத்தை கருத்திற்கொண்டு, சஜித்தின் தரப்போ அல்லது ரணிலின் ஆதரவாளர்களோ ஒருபோதும் அநுரவுக்கு விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை என்பது அண்மைய அரசியல் நடைமுறைகளில் அறிய முடிவதாகவும் அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (ச-இ)



## தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் உரிமை

### நான் தலையிடவில்லையென மனோ எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

தமிழ்ப்பொது ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தியதற்கு வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கும் அவர்கள் சார்ந்துள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் பூரண உரிமை உண்டு. அவர்களின் முடிவுகளில் நான் தலையிடவில்லை.

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில ஊடகங்கள் நான் கூறிய கருத்துகளை திரிவுபடுத்தி எனது கருத்தாக வெளியிடுவது ஊடக தர்மமல்ல. பொதுவேட்பாளர் என்ற கோஷத்தை வடக்கு- கிழக்குக்கு வெளியில் கொண்டு வராதீர்கள் என கூறியது உண்மை.

அவர்களது கோரிக்கை வடக்கு - கிழக்குக்கு உள்ளே பேசப்படுவது நியாயமானது எனக் கூறினேன். தவிர வேறு எந்த ஓர் அர்த்தத்திலும் பொது வேட்பாளர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கவில்லை. சில ஊடகங்கள் எனது கருத்தைத் திரிவுபடுத்தி தமக்கு ஏற்றவகையில் மாற்றி எனது கருத்தாக கூறியுள்ளன. நான் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிராகரிக்கவும் இல்லை எதிர்க்கவுமில்லை. ஏனெனில் தமிழ்ப் பொதுவேட்பாளர் நியமிக்கப்பட்டமை கண்ணியமானதும் நியாயமானதுமான விடயம். அது அவர்களின் உரிமை. அதே நேரத்தில் வடக்கு- கிழக்கிலுள்ள சில கட்சிகள் அதனை எதிர்க்கின்றன அதுவும் அவர்களது உரிமை. ஆகவே தமிழ்ப் பொதுவேட்பாளர் வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் அவை சார்ந்த தமிழ்க் கட்சிகள் எடுக்கும் முடிவுகளில் நான் தலையிடப் போவதில்லை- என்றார். (ச-27,20)

## சுற்றுலாவிகளுக்கு சொகுசு பஸ் சேவை

கொழும்பு. ஓக.17

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கும் கொழும்பு கோட்டைக்குமிடையே சொகுசு பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இடையில் எங்கும் தரிக்காத சேவையாக இது நடைபெறும். இதற்கு ஒரு வழிக்கட்டணமாக 3 ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளது. உல்லாசப்பயணிகளின் விரைவான போக்குவரத்தை கருத்திற்கொண்டு இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 6)

## ஊதிய உயர்வு யோசனை அரசியல் நோக்கமில்லை

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.17

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு பிரேரணையில் எந்தவித அரசியல் நோக்கமும் இல்லை. முடிந்தவரை மக்களுக்கு அதிகபட்ச நிவாரணங்களை வழங்கவே அரசாங்கம் செயற்படுகின்றது.

-இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

சில காலமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்து, முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தலைமையிலான நிபுணர்குழு வழங்கிய பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களின்படி, இந்த முன்மொழிவு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

தற்போதுள்ள வாழ்க்கை நிலைமைகள், பொருளாதார நிலை போன்ற சகல அம்சங்களையும் கவனத்தில் கொண்டு குழு அறிக்கை தயாரித்துள்ளது.

அத்துடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பல பிரச்சினைகள் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் நியமிக்கப்பட்ட குழுவினால் வழங்கப்பட்ட தீர்வு முன்மொழிவுகள் அடுத்த அமைச்சரவையில் முன்வைக்கப்படும் - என்றார். (ச-இ)



## மாற்றத்துக்கு நாங்களே பொருத்தமானவர்கள்

### அநுரகுமார உறுதியாகத் தெரிவிப்பு

நாட்டு மக்கள் மாற்றத்துக்குத் தயாராகிவிட்டனர், அந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அணியே தேசிய மக்கள் சக்தி என்பதால் மக்களின் ஆதரவு எமக்கே உள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார தெரிவித்தார். வேட்புமனு தாக்கலுக்குப் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டுமக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர், அந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அணியின் வேட்பாளர் நான்தான். எனவே, தேர்தலில் எமக்கு வெற்றி நிச்சயம். நாட்டின் அரசியல் கலாசாரம் எவ்வாறு உள்ளது என்பதை கடந்தசில நாட்கள் தெளிவுபடுத்திவிட்டன. அந்தளவுக்கு தாவல் அரசியல் இடம்பெறுகின்றது. கொள்கையற்ற அரசியல்வாதிகள் அங்கும், இங்கும் தாவுகின்றனர். இந்த அரசியல் கலாசாரம் மாறவேண்டும் என மக்கள் நினைக்கின்றனர். மக்களின் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய அணியினர்தான் நாம். மக்களுக்கான அரசியலை நிச்ச யம் முன்னெடுப்போம் - என்றார். (ஒ-44)



## ஊழலற்ற மக்களாட்சி செப்.21 இன் பின் மலரும்

### சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

செப்ரெம்பர் 21ஆம் திகதிக்குப் பிறகு இலங்கை மக்களுக்குரிய ஊழல் அற்ற மக்களாட்சி மலரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்த பின்னர், கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஊழல், மோசடி மற்றும் கொள்ளையற்ற நல்லாட்சியே எமது இலக்காகும்.

அதற்குரிய ஆணையை மக்கள் வழங்குவார்கள், அதன்பிறகு நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் வெற்றிபெற வைக்கும் பயணம் ஆரம்பிக்கப்படும். நாட்டை மீட்கக் கூடிய அணி ஐக்கிய மக்கள் கூட்டணியில்தான் உள்ளது. எமது அணி சிறிலங்கா பெஸ்ட் என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படும் - என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், ஓக.17
நல்லூர்க்கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழாவின் ஏழாம் நாள் மாலை உற்சவத்தை முன்னிட்டு நல்லை கந்தப்பெருமான் காமதேனு வாகனத்தில் பக்தர்கள் புடைசூழ அலங்காரக் கந்தனாக வெளி வீதி உலா வந்தார். (ச-25, 100)



## உணவுப்பொதிகள் வழங்கிவைப்பு!

யாழ்ப்பாணம், ஓக.17
கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட அமரர் சிவநெறிச்செல்வர் நடராசா இரத்தினத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடராஜா இரத்தன தீபம் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 1500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

தாயாரின் நூற்றாண்டு நினைவாக பிள்ளைகள், உறவினர்களின் ஏற்பாட்டில் உருத்திரபுரம் முருகன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு, கிராம மக்களுக்கு அன்னதானம் வழங்கிவைக்கப்பட்டதுடன் கிளிநொச்சி கரைச்சிபிரதேசத்தின் உருத்திரபுரம் கிழக்கு, சிவநகர்,செல்வாநகர், ஜெயந்திநகர், நான்கு கிரம அலுவலர் பிரிவின் 1500 வரையான குடும்பங்களுக்கு தலா 3500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ரி-19)



## நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி, ஓக.17
இரத்தினபுரத்தைச் சேர்ந்த ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிவ.திருக்கேதீஸ்வரன் எழுதிய புழுதிக் கதைகள் அனுபவப்பகிர்வு நூல் வெளியீட்டு நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட சமுர்த்தி திணைக்களப் பதில் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக கரைச்சிபிரதேச செயலர் த.முகுந்தன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.சிவகுமார், சின்மயா மிஷன் கிளிநொச்சி வதிவிட ஆச்சாரி சிவேந்திர சாத்தானியா, ஓய்வுநிலை அதிபர், ஆசிரியர்கள், பொது அமைப்புகளைச் சேர்ந்தோர், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-45-113)

## நல்லூர் திருவிழாவின் 9ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம். ஓக.17
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

9ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க காயத்திரிபீடம் தர்மசாஸ்தா குருகுல ஆசிரியர் சிவஸ்ரீ மகாதேவ சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக நெடுந்தீவுப் பிரதேச செயலர் திருமதி நிவேதிகா கேதீசன், சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். சைவ வாலிப சங்க அறநெறிப் பாடசாலை, பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை, தவளக்கிரி முத்துமாரிஅம்மன் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி அழகொல்லை விநாயகர் அறநெறிப் பாடசாலை, விழிசிட்டி ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, மாவை பொதுச்சேவைக் கழக அறநெறிப் பாடசாலை, அண்ணமார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விஷேட நிகழ்வாக விஜய குமாராசர்மா வத்சாங்கிதசர்மா வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ரி)



## கலந்துரையாடலும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், ஓக.17
உடுவில் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி பிரிவால் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கலந்துரையாடலும், உளவிருத்தியை மேம்படுத்தும் தொடர்பான கருத்தரங்கு யாழ்.உடுவில் அ.மி.த. இ.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலை அதிபர், முகாமையாளர்கள், வளவாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி)




நல்லூரில் கந்தனாகவும் சந்நிதியில் வேலனாகவும்
கதிர்காமத்தில் கதிர்வேலனாகவும்
ஊரெங்கும் வேல் கொண்டு கொழுவிருக்கும்
ஈழ நிலத்தின் இணையில்லா தெய்வமே!

எமது வீடு எரிந்தாலென்ன
எமது குடி மூழ்கினாலென்ன
எமது தலைமேல் குண்டுமழை பொழிந்தாலென்ன

எமது மூச்சு நின்றாலென்ன
எமது நா வறண்டாலென்ன
எமது வயிறு பசியால் வாடினாலென்ன

எமது உறவுகள் கைது செய்யப்பட்டாலென்ன
எமது உறவுகள் கடத்தப்பட்டாலென்ன
எமது உறவுகள் வலிந்து
காணாமலாக்கப்பட்டாலென்ன

எமது உறவுகள் வன்புணர்வு செய்யப்பட்டாலென்ன
எமது உறவுகள் அநாதைகளாக்கப்பட்டாலென்ன
எமது உறவுகள் சிறையிருட்டில் தவித்தாலென்ன

எமது உறவுகள் செத்து விழுந்தாலென்ன
எமது ஊரே சுடுகாடாய் போனாலென்ன
ஏன் எமது நாடே அழிந்தாலென்ன
உனக்கேதும் குறைவைக்கவில்லையே நாம்!

நித்தமும் உனக்கு ஆறு காலப் பூசைகள்
ஆண்டொருமுறை 25 நாள் திருவிழாக்கள்
காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல்
அங்கப்பிரதட்சணம் செய்தல்
அடியழித்தல் என வேண்டுதல்கள் பற்பலவாயிற்றே

இருந்தும் உன் கருணைப் பார்வை
எம்மீது படவில்லையே...!

'யாமிருக்கப் பயமேன்'
எனும் உந்தன் தாரக மந்திரம்
இன்றுவரை எதிரிகளுக்கும்
துரோகிகளுக்குமல்லவா
துணைநிற்கிறது!

இயற்கை விதிமீறி பலவந்தமாகப் பறிக்கப்பட்டது
ஒன்றா இரண்டா லட்சம் பேரின் உயிர்களல்லவா!

உயிர்ப்பறிப்பின் போது மூடிய உன் கருணைக்
கண்கள் நீதி மறுக்கையிலும் திறக்கவில்லையெனில்
நீ கல்லா கடவுளா...?

ஒருவேளை இனம் மொத்தமும்
அழிக்கப்பட்ட பின்னர்தான்
உந்தன் மனமிரங்குமோ தெரியவில்லை?

நம்பி நின்ற
நாம் நாதியற்றுப் போயினும்
உனக்கொரு குறைவையோம் முருகா!
நல்லூரம் பதியில்
நாளும் பொழுதும்
மனையாளுடனும்
துணையாளுடனும்
நலமுடனே நலமுறுக!

■ இரா.மயூதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைக்க அரசியல்பற்றி சிந்திக்கவேண்டுமாம்

**ரணிலிடம் ரூ. 40 கோடி பெற்ற சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு**

**கொழும்பு, ஓக. 17**

**தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தால் தமிழ் மக்களுக்கு ஒன்றும் கிடைக்கப் போவ தில்லை. எனவே, இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழர் தரப்பு சரிவரப் பயன்படுத்த வேண்டும்.**

அத்துடன், அடுத்த ஐந்து வருடங்களுக்கு இணக்க அரசியல் பற்றி சிந்திக்கவேண்டும் -இவ்வாறு இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் 596 மில்லி யன் ரூபாவுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட் டின் ஊடாக கோரிக்கைகளை முன்வைத்த இரா. சாணக்கியனுக்கு இதுவரை 400 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தனியார் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் எவருக்கு ஆதரவளிப்பதென தமிழரசுக் கட்சி இன்னும் முடி வெடுக்கவில்லை. தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது பற்றி யும் தீர்மானம் எடுக்கப்பட வில்லை. எனினும், தமிழரசுக் கட்சியின் அனுமதியின்றி பொதுவேட்பாளராகக் களமி றங்கியுள்ள கட்சியின் மத்திய குழு உறுப்பினரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

தமிழ் பொதுவேட்பாளர் என் பது நாடகம் என்பது எனது கருத்து. இதுபோன்று கட்சிக் குள் பல கருத்துகள் இருக்க லாம். இறுதியில் கட்சி எடுக்கும் முடிவுக்கு நாம் கட்டுப்படு வோம்.

தென்னிலங்கையில் உள்ள மூன்று பிரதான வேட் பாளர்களில் ஒருவர்தான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப்போகின்றார், எனவே, தமிழ் பொது வேட்பாளரை கொள்கை அளவில் நாம் ஆதரித்தா லும் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவ தில்லை.

நாட்டில் ஜனாதிபதியொருவரை தீர்மானிக்கும் சக்தி யாக நாம் இருக்கின்றபோது, அதனைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். 2015இல் நாம் ஆதரித்த வேட்பாளர் வெற்றிபெற்றார். அதன்மூலம் காணி விடுவிப்பு உட்பட பல நன்மைகள் கிடைக்கப் பெற்றன. புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய ஏற்பாடுகள்கூட இடம்பெற்றன. எனினும், அரசியல் குழப்பம் ஏற்பட்டதால் அம்முயற்சி கைகூடவில்லை. அதேவேளை, மாகாணங்களுக்கு அதிகாரப்பகிர்வு கிட்டும்வரை மத்தியில் ஆட்சியுடன் கூட்டுசேர்வ தில்லை என்பது கட்சியில் கொள்கை. ஆனால், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இணக்க அரசியல் அவ சியம் என்பது எனது தனிப்பட்ட கருத்து. 2015இல் மைத்திரி எமது ஆதரவுடன் ஜனாதிபதியானதால் தான் போருக்குப் பின்னரான இறுக்கமான சூழ் நிலை சற்றுத் தளர்ந்தது. ஆனால், கோத்தா ஆட்சி க்காலத்தில் மீண்டும் இறுகியது. கடந்த இரு வருடங் களில் அவ்வாறான இறுக்கம் இல்லை. முற்றாக மாறிவிட்டது எனக் கூறவில்லை. எனவே, ஆட்சி மாற்றத்தின் பிறகு, தமிழர்களுக்கு அநீதி இழைக் காத தரப்பு ஆட்சிக்கு வந்தால் இணக்க அரசியல் நடத்துவது பற்றி கட்சியின் மத்தியக்குழு ஆராய வேண்டும்- என்றார். (ஒ-44)

**யா/வரணி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**பொதுக்கூட்டம்**

காலம் :- 31.08.2024 சனிக்கிழமை
நேரம் :- முற்பகல் 9.30 மணி
இடம் :- கல்லூரியின் பிரதான மண்டபம்

நிகழ்வுகள்

1. தலைவர் உரை
2. செயலாளர் அறிக்கை
3. பொருளாளர் அறிக்கை
4. செயற்பாட்டு அறிக்கை
5. புதிய நிர்வாகக்குழு தெரிவு
6. பிறவிடயங்கள்

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்
து.இளங்குமரன்

(CR/42934) J-1

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**

மலர்வு 02 . 10 . 1946



மறைவு 19 . 07 . 2024

கடந்த 19.07.2024 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் சோமசுந்தரம் புவனேந்திரன்**
(இந்திரன் - மாவை)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (16.08.2024) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்ட அயலவர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், ஆத்ம சாந்திக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும். கிரியை செய்த குருமார்களுக்கும், அஞ்சலிப் பதாகைகளை வைத்தவர்களுக்கும், பல்வேறு வகைகளில் உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயம் சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

29, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/55938) J-1

# பிரதான கட்சிகளின் பிரகடனம் இம்மாதம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரதான அரசி யல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் இம் மாத இறுதிக்குள் முன்வைக்கப்பட வுள்ளது அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

இதற்குரிய ஏற்பாடுகள் தற்போது தீவிரமாக இடம்பெற்றுவருவதுடன், பல்துறைசார் பிரதி நிதிகளின் ஆலோசனைகளும் உள்வாங்கப் பட்டுள்ளன. தேசிய மக்கள் சக்தியின் ஜனா திபதி வேட்பாளர் அநு ரகுமார திஸாநாயக்க வின் தேர்தல் விஞ்ஞா பனம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெளியிடப் படவுள்ளது.

ஶ்ரீலங்கா பொதுன பெரமுன கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்தவாரம் வெளியி டப்படும் தெரிவிக்கப்ப டுகிறது. ஐக்கிய மக் கள் சக்தியின் ஜனாதி பதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றும் சுயாதீன வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க ஆகியோ ரின் தேர்தல் விஞ்ஞாப னங்களும் மாத இறு திக்குள் முன்வைக்கப்ப டவுள்ளது. (ச-44)

**யாழ்ப்பாணம் மாநகரசபை**
**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் கோருவது தொடர்பான அறிவித்தல் -2024**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான ஏலம் கோரப்படவுள்ளது.

- ஏலம் கோரவுள்ள திகதி :- 21.08.2024 முற்பகல் 10.00 மணிக்கு
- ஏலம் கோரப்படவுள்ள இடம் : - நானாவித இறைவரி பகுதி, மாநகர சபை வளாகம்.
- இது தொடர்பான மேலதிக விபரங்கள் , நிபந்தனைகள், வரைபடம் என்பன தொடர்பாக மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் அறிந்துகொள்ள முடியும் .

மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பிணம்தின்னிகளிடம் அவதானம்!

இந்தியா எதிர்கொள்ளும் மிகப்பெரும் நில ஆக்கிரமிப்புக்குள் கச்சதீவையும் உள்வாங்கியிருக் கின்றார் தமிழக ஆளுநர் கே.என்.ரவி. இந்தியாவின் சுதந்திரதினம் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. அதற்கு முன்னைய நாளை 'பிரிவினைவாத துன்பியல் தினமாக' அங்கு கடைப்பிடிக்கின்றனர். பிரிட்டிஷார் பாகிஸ்தானுக்கு சுதந்திரம் வழங்கியபோது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை 'பிரிவினைவாதம்' என்ற கண்ணோட்டத்தில் பார்க்கின்றது பாரதம். இதை முன்னிட்டு தமிழக ஆளுநர் மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே இந்தியாவின் 'நவயுக நில ஆக்கிரமிப்பு துன்பியலாக' கச்சதீவைக் கோடு காட்டியிருக்கின்றார் தமிழக ஆளுநர். 'பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது பாகிஸ்தான் எம்மிடமிருந்து (இந்தியா விடமிருந்து) பெரும் நிலப்பரப்பைப் பறித்துக்கொண்டதை எம்மில் பெரும்பாலானவர்கள் மறந்துவிட்டனர். தற்போதும் இந்த ஆக்கிரமிப்புகள் மற்றும் நிலப்பறிப்புகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கிழக்கு லடாக்கில் பெரும் பகுதியை ஆக்கிரமிக்க சீனா முயன்றுகொண்டிருக்கின்றது. கச்சதீவை இலங்கைக்கு வழங்கியதால் எமது மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையால் தாக்குதல்களும் துப்பாக்கிச்சூடும் நடத்தப்படுகின்றது' என்றும் தமிழக ஆளுநர் கூறியிருக்கின்றார்.

இந்தியா-பாகிஸ்தான், இந்தியா-சீனா இடையிலான எல்லைப் பிரச்சினைகள் என்பவை மிக வலியவை என்பதுடன், அவை பரமவைரிகள் இடையிலான விவகாரமும்கூட. ஏதேனும் விவாதங்கள் இடம்பெற்றாலோ அல்லது மோதல்கள் இடம்பெற்றாலோ இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒப்புவமைகாட்டி பழக்கப்பட்டவர்கள் நாங்கள். அப்பேர்ப்பட்ட தீவிரமானதும், தீர்க்கப்பட முடியாததும், உலகப் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடியதுமான விவகாரத்தில், கச்சதீவையும் வலிந்து புகுத்துவதற்கு தமிழக ஆளுநர் முயன்றுகொண்டிருப்பது அபத்தத்தின் உச்சம். மட்டுமல்லாமல், அவருடைய அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையையும் அறியாமையையும்தான் இது வெளிப்படுத்துகின்றது.

ஆளுநர் என்பவர் கட்சிக்கொடிகளால் அடையாளப்படுத்தப்பட முடியாதவராக இருந்தபோதிலும், ஆளும் பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழக முகவராகவே ஆளுநர் ரவி செயற்படுகின்றார். அவர் திராவிடத்தின் மீது கொண்டுள்ள வன்மத்தால் தமிழர்களைப் பிரித்தாள முற்படுகின்றார் என்று தி.மு.க.வும், தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்துள்ள ம.தி.மு.க. மற்றும் காங்கிரஸ் உள்ளிட்ட பிரதான கட்சிகளும் நீண்டகாலமாகவே விமர்சித்துவரும் நிலையில், அந்த விமர்சனங்களின் உண்மைத்தன்மையை ஆளுநர் ரவி தற்போது புடம்போட்டுக் காட்டியிருக்கின்றார். அத்துடன், கச்சதீவு விவகாரத்தில் தமிழக மீனவர்களையும், ஈழ மீனவர்களையும் பிரித்தாள்வதற்கு எவ்வளவுதூரம் அதிகாரம் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றது என்பதையும் ஆளுநர் ரவியின் உரையில் இருந்து அறிவார்ந்த தமிழர்கள் உய்த்துணர்ந்துகொள்ளவேண்டும்.

ஈழத்தவர்களுக்கும் சோழத்தவர்களுக்கும் இடையிலான உறவென்பது இன்று, நேற்று நிகழ்ந்ததல்ல. இது உலகின் முதுபெரும் இருகுடிகளுக்கு இடையிலான பிணைப்பு. இந்தப் பிணைப்பு வலுப்பெற்றால் அது பிராந்திய அரசுகளின் இருப்புக்கு ஆபத்தையே விளைவிக்கும். எனவே, தணல் நிலையில் கனன்று கொண்டிருக்கும் அத்துமீறிய மீன்பிடி மற்றும் கச்சதீவு விவகாரங்களில் அவ்வப்போது மண்ணெண்ணெய்யை ஊற்றிவிட அதிகாரக் கதிரைகள் எத்தனிக்கவே செய்யும். இந்திய-பாகிஸ்தான் பிரச்சினை பேசப்பட்ட அதே இடத்தில்-அதேநேரத்தில், கச்சதீவும் சமானமாக நிற்கின்றது என்றால் இதை எவ்வளவு 'போர்ப்பதற்றம்' நிறைந்ததாக மாற்றுவதற்கு அதிகாரம் நினைக்கிறது என்ற புரிதலை தமிழக, ஈழ உறவுகள் வளர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், பிரித்தாளும் பிணம்தின்னிகளின் காலம் இது...!



# யாழ். மாவட்டத்தில் ஓ.எம்.பி. விசாரணை

நேற்று முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

**காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தால் யாழ். மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிடம் நேற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

உடுவில், கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்டோருக்கே உடுவில் பிரதேச செயலகத்தில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இன்றும், யாழ்ப்பாணம், சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நாளையும் விசாணைகள் இடம்பெறவுள்ளன. (ஒ-27)

## 7 நாடுகளுக்கு புதிய தூதுவர்கள்

கொழும்பு, ஓக. 17

7 நாடுகளுக்கான இலங்கையின் தூதுவர்கள் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தோனேஷியா, கட்டார், எகிப்து, ரஷ்யா, ஈரான், பஹ்ரைன், நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்கே புதிய வெளிநாட்டுச் தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனத்தில் ஒரு தமிழர் கூட இடம் பெறவில்லை. (ஒ-6)

## மாற்றினார் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது 'ரணில் விக்கிரமசிங்க யு.என்.பி.' (@RWUNP) என்ற எக்ஸ் தள கணக்கை 'ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா' (@RWSRILANKA) என மாற்றியுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவுள்ள நிலையில் இந்தப் பெயர் மாற்றம் இடம்பெற்றுள்ளதாக அறியவருகிறது. (ச-25, 6)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் சாவு

கொழும்பு, ஓக. 17

ஸ்ரீபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கமுன்புர, பிள்ளையார் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 26 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று அதிகாலை இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரே ரி-56 ரக துப்பாக்கியால் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## தேர்தல் கண்காணிப்புக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 17

ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் நடைபெறும் சட்டமீறல்களை அறிக்கையிடுவதற்காக பிரஜைகள் அறிக்கை பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முன்னெடுப்பு 'வியூ' அமைப்பு தெரிவித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பிரஜைகள், சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் 077 444 3749 என்ற வட்ஸப் இலக்கத்தின் ஊடாகவோ info@viewlk.org என்ற மின்னஞ்சல் ஊடாகவோ அறிக்கையிடலை மேற்கொள்ளமுடியும் என தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முன்னெடுப்பு அமைப்பின் தலைவர் ரவீந்திர டி சில்வா அறிவித்துள்ளார். (ஒ-இ)

### நாளை

18.08.2024

ஞாயிற்றுக்கிழமை - ஆவணி - 02

சுபநேரம் : 09.05 - 10.35

ராகுகாலம் : 04.35 - 06.05

1ஆம் ஆவணி ஞாயிறு

### நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல
மற்றவர் மனதில் நீ வாழும் வரை

-அன்னை தெரேசா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதங்கேணி ஆக்கிரமிப்பு சதி நடவடிக்கையைத் தடுக்கவும்

## வடக்கு ஆளுநருக்கு மக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஓக. 17**

**மருதங்கேணி கிராமத்தின் நிலப்பகுதிகளை அபகரித்து தாளையடியாக அறிவிக்கும் சதி நடவடிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ஆகியோர் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என மருதங்கேணி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

மருதங்கேணி கிராமஅலுவலர் பிரிவிலிருந்து தனி கிராம அலுவலர் பிரிவாகத் தங்களை அடையாளப்படுத்தவேண்டும் என்று வடமராட்சி கிழக்கின் தாளையடி கிராம மக்கள் கோரியிருக்கிறார்கள்.

இந்தக் கோரிக்கைக்கு மருதங்கேணி மக்களும், பொது அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தாளையடிக் கிராமம் என்பது, கத்தோலிக்க மதத்தினர் வாழும் பகுதியாகும். அதன் நிலப்பரப்பு மிகவும் சிறியது. தற்போது, அங்கு 141 குடும்பங்களே வாழ்ந்து வருகின்றனர். ஆனால், தாளையடியை தனிக் கிராமமாக மாற்றும் முயற்சிகளின் போக்கில், மருதங்கேணியின் பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் சதி முயற்சிகளை, சில தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர்.

மருதங்கேணி கிராமத்தில் 95 வீதமான மக்கள் சைவசமயத்தை பின்பற்றுபவர்கள். அவர்களின் கோவில்கள், வளவுகள், வயல்கள், கடற்கரை உள்ளிட்ட பெரும் பகுதிகளையும் ஆக்கிரமித்து தான்தோன்றித்தனமாக எல்லைகளை வரையறுத்து தாளையடியாக அறிவிக்கும் வகையிலான கடிதமொன்றை, வடமராட்சி கிழக்கின் பிரதேச செயலர் யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு எழுதியுள்ளார்.

இந்தச் சதி முயற்சிக்கு எதிராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் முன்னால், தொடர்ச்சியாக இரு நாட்கள் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அப்போது, பிரதேச செயலர், தான் எந்தவித கடிதங்களையும் மாவட்டச் செயலருக்கு எழுதவில்லை என்று கூறினார். ஆனால், அவர் எழுதிய கடிதத்தின் பிரதிகளை, மருதங்கேணி மக்கள் அவரிடம் காண்பித்து விளக்கம் கோரியபோது, அவர் எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டார்.

தாளையடி தனிக் கிராமத்துக்கான எல்லை வரையறை தொடர்பில், மருதங்கேணி மக்களுடன் எந்த வித கலந்துரையாடலும் பிரதேச செயலகத்தாலோ, எல்லை வரையறை தொடர்பிலான பிரிவினராலோ மேற்கொள்ளப்படவில்லை.

மருதங்கேணி மக்களுக்குத் தெரியாமல், மறைமுகமாக மருதங்கேணியின் பெரும் நிலப்பகுதியை அபகரித்து புதிய கிராமமாக அறிவிக்கும் நோக்கமே, சதி முயற்சிகளில் ஈடுபடுவோரிடத்திலும் காணப்படுகின்றது. இந்தச் சதி முயற்சிகளை உடனடியாக நிறுத்துமாறு - அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)



### தே.ம.சக்தியின்

# யாழ்.மாவட்டத்துக்கான அலுவலகங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.17

தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்டத்துக்கான தேர்தல் பிரசார அலுவலகங்கள் நேற்று வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

இல. 298, யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியிலும் அதேபோன்று இல. 362, பிரதான வீதி கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் தேர்தல் அலுவலகங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வுகளில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர், கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (ச-25,27,113)



# மணல் அகழ்வு; டிப்பர் பறிமுதல்

## சாரதிக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்.சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை புத்தூர்ச் சந்தியை அண்மித்த பகுதியில் போலியான அனுமதிப்பத்திரத்துடன் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியதுடன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் கடந்த புதன்கிழமை இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது.

சந்தேகநபரை நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-25,20,27,159)



# விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

கிளிநொச்சி, ஓக. 17

சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தி கிளிநொச்சியிலிருந்து ஒலுமடு வரை துவிச்சக்கரவண்டி விழிப்புணர்வுப் பயணம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. உடல் ஆரோக்கியத்துக்கு இன்றியமையாத சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தி துவிச்சக்கர வண்டிப் பயணம் கிளிநொச்சி அம்மாச்சி உணவகத்துக்கு முன்பாக ஆரம்பித்து மாங்குளம் ஒலுமடுவில் உள்ள இயற்கை முறை பண்ணையில் நிறைவடைந்தது. கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சூ.ஜெகதீஸ்வரி, கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் சு.யதீஸ்வரன், முருகானந்தாக் கல்லூரியின் அதிபர் அ.பங்கயற்ச்செல்வன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (ஒ-113)

# யாழ். பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியத் தேர்தல்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்துக்கு நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

வேட்பாளர்களாக இளங்கணேசன் தர்சிகா, மனோகரன் சோமபாலன் ஆகிய இருவரும் போட்டியிட்டனர்.

இதில் ம.சோமபாலன் 326 வாக்குகளையும் இ.தர்சிகா 50 வாக்குகளையும் பெற்றனர். அதன்படி அதிக வாக்குகளைப் பெற்ற ம.சோமபாலன் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதேவேளை யாழ். பல்கலைக்கழக பீடங்களின் ஒன்றியங்கள் தெரிவான பின்னரே யாழ். பல்கலைக்கழக பிரதான மாணவர் ஒன்றியம் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ச-22,26)



கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயத்தில் சுற்றாடல் முன்னோடிக்குழு மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (ச-25,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் மந்திரிமனையைப் பாதுகாக்க தமிழ் உணர்வுள்ளோர் கைகோருங்கள்

## அவைத்தலைவர் சி.வீ.கே. அழைப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 17**
**இடிந்துவிழும் நிலையில் உள்ள நல்லூர் மந்திரிமனையைப் பேணிப் பாதுகாக்க தமிழ்த் தேசிய உணர்வுள்ள அனைவரும் கைகோர்க்க முன்வரவேண்டும் என்று வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலிய மன்னனது மந்திரிமனை தற்போது இடிந்து விழும் நிலையில் மிகவும் ஆபத்தான விதத்தில் காணப் படுகின்றது.
இது தொடர்பில் தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட துறைசார் தரப்பினருடன் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் நல்லூர் மந்திரிமனையைப் பேணிப் பாதுகாக்க இணக்கம் காணப்பட்டது. அதன்படி நல்லூர் மந்திரிமனையில் மேற்கொள்ளவேண்டிய புனரமைப்புத் திட்டங்களை தொல்லியல் திணைக்களம் வழங்கும். நம்பிக்கைப் பொறுப்பாளர் மருத்துவர் செந்தில்குமரன் தொல்லியல் திணைக்களத்தின் திட்டத்துக்கமைய இதனைப் புனரமைக்க முன் வந்துள்ளார். ஆகவே தமிழ் உணர்வு தேசியம் தொல்லியலில் அக்கறையுள்ள நிலத்திலும் புலத்திலும் உள்ளவர்களும் குறித்த விடயத்தில் கைகோர்த்து நிதி ரீதியிலான உதவியை வழங்கி நல்லூர் மந்திரிமனையைக் காக்க முன்வர வேண்டும்- என்றார். (ஒ-20)



யாழ். போதனாவுக்கு

# 11 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருள்கள்

கொழும்பு, ஓக. 17
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு 11 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் கையளிக்கப் பட்டன.
உமந்தவ சர்வதேச பௌத்த கிராமத்தின் சார்பில் ஸ்ரீ சமந்த பத்ர மகா ஆராத் தேரரினால் குறித்த மருந்துப் பொருள்கள் மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.
நிகழ்வில் மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் யமுனாநந்தா, கண் மருத்துவ நிபுணர் மலரவன், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ்ப்பாணப்பொலிஸ் நிலையப்பொறுப் பதிகாரி, மருத்துவமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-20)

# தலதா மாளிகையில் ரணில் வழிபாடு

கொழும்பு, ஓக. 17
ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்த கையுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அத்துடன் அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளின் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார். (ஒ-6)

நுணாவிலில்

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவிலிலுள்ள விடுதியொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 3கிலோகஞ்சாப் பொதியுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மடக்கிப் பிடித்து சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சந்தேகநபர்கொழும்பைச் சேர்ந்தவர் என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-25, 27, 20)

# நடமாடும் தொழில் வழிகாட்டல் யு.எஸ்.எயிட் முன்னெடுப்பு

யு.எஸ்.எயிட் நிறுவனம் நாடளாவியரீதியில் கிராமப்புற இளையோருக்கான நடமாடும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது. இதற்கென பேருந்து ஒன்று அமெரிக்கத் தூதரகத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ச-25-6)

# ஐ.நா.வுக்கான இலங்கைப் பிரதிநிதிக்கு ஆஸி. நீதிமன்றம் தண்டம் விதிப்பு

கொழும்பு, ஓக. 17
ஐ.நா.வுக்கான இலங்கையின் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக அவுஸ்திரேலியாவுக்கான பிரதித் தூதுவராகக் கடமையாற்றிய காலத்தில் தனது வீட்டு பணிப்பெண்ணுக்கு ஒழுங்காக சம்பளம் வழங்காத குற்றத்துக்காக 5 இலட்சத்து 43 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் வழங்குமாறு அவுஸ்திரேலிய சமஷ்டி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
கான்பெராவிலுள்ள முன்னாள் பிரதி இலங்கைத் தூதுவரின் இல்லத்தில் கடமையாற்றிய பிரியங்கா தனரத்ன என்ற பணிப்பெண்ணுக்கு 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 11 ஆயிரத்து 200 அவுஸ்திரேலிய டொலர் மட்டுமே சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வாரத்தில் ஏழு நாள்களும் பிரியங்கா வேலை செய்துள்ளார். பிரியங்கா வீட்டைவிட்டு வெளியே செல்லவும் அனுமதிக்கப்படவில்லை.
21ஆம் நூற்றாண்டில் அவுஸ்திரேலியாவில் ஒருவருக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 75 சதம் அவுஸ்திரேலிய டொலர் வழங்கப்பட்டுள்ளமை அதிர்ச்சிக்குரிய விடயம் என அவுஸ்திரேலிய அரசியல்வாதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.
அருணதிலகவை 2023ஆம் ஆண்டு ஐ.நா.வுக்கான நிரந்தரப் பிரதிநிதியாக இலங்கை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-6)




இப்ப எல்லாருக்கும் மாபியா எண்டால் மனக் கண்ணுக்குள்ள வாறது டாக்குத்தர்மார்தான். அந்தளவுக்கு மாபியா எண்ட லேபிளை எல்லாருமாச் சேர்ந்து டாக்குத்தர்மாரில ஒட்டிப்போட்டம். ஆஸ்பத்திரியளில என்ன பிழை நடந்தாலும் அதுக்கு அந்த டாக்குத்தர் காரணம். இந்த டாக்குத்தர் காரணம் எண்டு ஆரும் ஒரு டாக்குத்தரில பழியைப் போடத்தான் எல்லாரும் பாக்கினமே தவிர, எங்க பிழை இருக்கும் எண்டு ஆறஅமர யோசிக்கிறேலை. சில டாக்குத்தர் மாரிலயும் பிழை இருக்குத்தான். ஆனால் ஒண்டிரண்டு பேர் செய்த பிழைக்காக எல்லாரும் அப்பிடியெண்டு 'மாபியா' முத்திரை குத்திறது எந்தவகையில நியாயமெண்டு தெரியேலை.

கொஞ்சநாளா உந்த ஆஸ்பத்திரியளில நடக்கிற கூத்துகளை பார்த்தீங்க ளெண்டால் ஒண்டிரண்டு விசயத்திலதான் டாக் குத்தர்மாரில பிழை இருக்கும். மிச்சமெல்லாம் ஆஸ்பத் திரியில வேலை செய்யிற மற்றவையிலையும், நிர் வாகங்களிலையும், மேல்மட்டங்களிலையும், பிரை வேட் ஆஸ்பத்திரிக்காரரிலையும்தான் பிழை இருந்ததைப் பார்த்திருப்பியள். இவை எல்லாரையும் விட ஆஸ்பத்திரியள் நாறுறதுக்கும், அங்க வருத் தக்காரர் வார்ட்டில நிக்காமல் பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்கு ஓடுறதுக்கும் ஆர் காரணம் எண்டு நினைக் கிறியள். வேற ஆர்? நாங்கள் தான். நாங்களெண்டால் வருத்தமெண்டு போற ஆக்கள் தான். ஆஸ்பத்திரிக்குப் போனால் வருத்தத்தைக் காட்டினமாம், மருந்தைக் குடிச்சமாம், வார்ட்டில இருந்தமாம், மாத்தினமாம், வந்தமாம் எண்டு எங்கட ஆக்கள் இருந்தால் சோலி இல்லை. ஆஸ்பத்திரிக்குப் போனாலும் எல்லாச் சோக்கும் எங்கட ஆக்களுக்கு வேணும். வெத்திலை பாக்கில இருந்து சாராயம் வரைக்கும் அங்க இருக் கேக்கையும் அனுபவிக்கோணும்.

ஆனால் வார்ட்டில இப்பிடி வெத்திலை போடவோ, தண்ணியடிக்கவோ முடியாது. அப்ப என்ன செய்வினம்? பாத்ரூம்தான் அவையின்ர சொர்க்காபுரி. அடிக்கடி பாத்ரூம் பக்கமா போய் நிண்டு வெத்திலையை அதக்கி, அதக்கி பிறகு 'புளிச்' செண்டு அங்கத்தை சுவரிலை துப்பிப்போட்டு வாறது. காப்போத்தில் சாராயத்தை 'மடக் மடக்' எண்டு ஒரே இழுவையில மண்டிப்போட்டு அந்தப் போத்திலையும் அப்பிடியே ரொய்லெட் பேசினுக்குள்ள எறிஞ்சு போட்டு வாறது. வெறியில ஒண்டுக்கு, ரண்டுக்கு போறதுகூட தெரியாமல் தண்ணியும் ஊத்தாமல் போறது. இப்பிடி எப்பிடியெல்லாம் ஆஸ்பத்திரிக்கழிவறையளை நாசமாக்க முடியுமோ அவ்வளவும் செய்தால்தான் எங்கட ஆக்களுக்குப் பத்தியப்படும். இப்பிடி அங்கத்தை கழிப்பறையளை பாத்தாலே சத்திவாறமாதிரிச் செய்தால், என்னெண்டு மற்ற ஆக்கள் வார்ட்டில இருப்பினம்? அவையள் பிரைவேட்டுக்குப் போகத்தான் நினைப்பினம். இப்பிடி அரசாங்க ஆஸ்பத்திரியளை நாங்களே நாசமாக்கிப்போட்டு, பழியை மட்டும் டாக்குத்தர்மாரில போட்டிட்டு, 'நாங்களெல்லாம் உத்தமர்' எண்டு நடக்கிறது ஞாயமோ எண்டு உங்கட மனச்சாட்சியை ஒவ்வொருத்தரும் கேட்டுப்பாருங்கோ. முதலில எங்களைத் திருத்திப்போட்டு, பிறகு உந்த மாபியாக்களை திருத்துவமோ?

-பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.17
உரும்பிராய் கிழக்கு அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பாள் சமேத சிவ மகேஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், 31 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறுமென ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது. (ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிகப்படியான செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் போது கவனமாக இருக்கவும். வியாபாரத்தில் பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படும். சிரமங்கள் குறையும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலமாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்புத் தருவார்கள். அம்பிகை வழிபாடு நற்பலன்களை அதிகரிக்கும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே காணப்படும்.

**கன்னி:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தொடர்பு கொண்டு பேசுவது மகிழ்ச்சி தரும். உற்சாகமாக இருப்பீர்கள்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் சற்றுக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சந்திப்பு மகிழ்ச்சி தரும்.



## தெய்வீக இசையரங்கில் முருகபக்தி கானமிர்தம்

யாழ்ப்பாணம், ஓக. 17
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ பெருவிழா ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. திருவிழாக் காலங்களில் தினமும் மாலைத்திருவிழா நிறைவு பெற்றதும் சந்நிதியான் சூழலில் அமைக்கப்பட்டுள்ள தெய்வீக இசையரங்கில் செல்வச்சந்நிதி கலாமன்றத்தில ஏற்பாட்டில் தினமும் ஆன்மீகம் சார்ந்த நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.
10 ஆம் திருவிழாவின்போது சிதம்பரம் இசை மைந்தனும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளருமாகிய நயினை பத்மநாதன் சிவமைந்தனின் முருகபக்தி கானமிர்தம் என்னும் கச்சேரி இடம்பெற்றது .
நிகழ்வில் அணிசேர் பக்க வாத்தியக் கலைஞர்களாக ஈழத்தின் புகழ்பூத்த கலைஞர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். அத்துடன் சந்நிதியான் கலாமன்றம் அவரை கௌரவப்படுத்து முகமாக சந்நிதியான் ஆலய திருவுருவப் படத்தை மலரும் நினைவுகளாக வழங்கிவைத்தனர். (ச-44)



வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பூங்காவனத் திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. (ரி-100)

## மரக்கறிச் செய்கை; விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஓக.17
யாழ். மாவட்டத்தில் இந்தப் போகத்தில் விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.
சுமார் 500க்கும் மேற்பட்ட ஹெக்ரேயர் நிலப்பரப்பில் விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டிருப்பதாக விவசாயத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.
கத்தரி, பயிற்றை, பாகல், பூசணி, தக்காளி, வெண்டிக்காய், பச்சை மிளகாய் போன்ற மரக்கறிப் பயிர்கள் கூடுதலாக பயிரிடப்பட்டு, அறுவடை செய்யப்பட்டு சந்தைகளுக்கும் வந்து சேர்வதால் அவற்றின் விலை சரிவடைந்துள்ளது. (ச-45-17)

## வரலட்சுமி விரத வழிபாடு

யாழ்ப்பாணம், ஓக.17
வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டு அம்பாள் ஆலயங்களில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.
இந்த பூசை வழிபாடுகளில் ஆலயங்களில் அதிகமான பெண்கள் கலந்துகொண்டதுடன் காப்பு கட்டுதல், அர்ச்சனைகள் மற்றும் தீபவழிபாடுகள் என்பனவும் இடம்பெற்றன. (ரி-17)

## பாரதி கலை மன்றத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 17
சுழிபுரம் மேற்கு பாரதி கலை மன்றம் நடத்தும் 42ஆம் ஆண்டு நிறைவு விழா 'தேசக்கட்டுமானத்தில் புலம் பெயர் தமிழர்களின் முதலீடு' எனும் தொனிப்பொருளில் மன்றத்தின் தலைவர் பா.பவ்ஷிஜன் தலைமையில் சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்ற முன்பள்ளி வளாக சுப்பையா பொன் அரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகம்,கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், சிறப்பு விருந்தினர்களாகச் சூழலியல் செயற்பாட்டாளர் விவசாயி சி.சுந்தரேஸ்வரன், ரெக் செலோன் செயற்றிட்ட முகாமையாளர் மற்றும் பொறியியலாளருமான செ.ரஜீவ்குமார், காரைநகர் பல்லுயிர் நிறுவன இயக்குநர் சி.நிறோஷன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர் மற்றும் பாரதி கலைமன்ற முன்னாள் தலைவர் தி.சிவசண்முகநாதன், முன்னாள் மன்ற செயற்குழு உறுப்பினர் சி.சிதம்பரநாதன், ஸ்ரீகணேச சனசமூக நிலையத் தலைவர் ஓ.கபிலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

## பப்பாசிச் செய்கை யாழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக.17
யாழ்.குடாநாட்டில் இம்முறை பப்பாசி செய்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று செய்கையாளர்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடுமையான வறட்சி வெப்பத்தினால் பப்பாசி மரங்கள் பூச்சித் தாக்கத்துக்கு இலக்காகி வருகின்றன. இதன்காரணமாக பப்பாசிச் செய்கை பாதிக்கப்படுவதுடன் அவற்றுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டு விலையும் அதிகரித்துள்ளது. ஒரு கிலோ பப்பாசிப்பழம் 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-ரி-17)

## சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும்

யாழ்ப்பாணம், ஓக.17
வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சங்காபிஷேகமும், மணவாளக்கோல உற்சவமும் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் பெண் இறப்பு!

யாழ்., ஓக. 17
மோட்டார்சைக்கிளில் பயணித்தபோது கீழே வீழ்ந்து படுகாயமடைந்த பெண், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

சாந்தை பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த நேசராசா பனுசா (வயது 33) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 11ஆம் திகதி சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றபோது கீழே வீழ்ந்து அவர் படுகாயங்களுக்கு உள்ளானார். தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

(ம-26-27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 06 . 1948



மறைவு 14 . 08 . 2024

### ஆனந்தகிருஷ்ணன் சரோஜாதேவி

யாழ்ப்பாணம் தாவடியைப் பிறப்பிடமாகவும் இந்தியா திருச்சியை வதிவிடமாகக் கொண்ட இந்தியா திருச்சியை வதிவிடமாகக் கொண்ட ஆனந்த கிருஷ்ணன் சரோஜாதேவி அவர்கள் கடந்த 14.08.2024 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தகிருஷ்ணனின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் விவேகானந்தன், புலேந்திரன், கமலாதேவி, மகேந்திரன், கதிர்காமநாதன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் சரஸ்வதி, ராசா, தங்கச்சியம்மா, குழந்தை, செல்வரத்தினம், செல்வராசா, சச்சிதானந்தம், தர்மராசா, தவமலர் ஆகியோரின் மைத்துனியும், ரோகினி, சுவிதரன், குமுதினி, மதிவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரகுநாதன், யோகநாதன், சுகந்தி, விஜயவதனி ஆகியோரின் மாமியாரும், அபர்னா, அதீனா, அலெக்சன், ஆருசன், ரனுசன், ரதுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சரன்யா, சகிந்ணா ஆகியோரின் அப்பம்மாவும், சின்னத்தங்கச்சி, கண்மலர், புஸ்பா, ஸ்ரீவாணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இந்தியாவில் உள்ள திருச்சி சீனிவாசா நகர், 5வது மெயின் றோட், 10 வது கிராஸ் இல் உள்ள வீட்டில் நடைபெறும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி இல:
ரோகினி (விஜி) - 0033 652 458 927
ரகுநாதன் - 0033 651 796 259
மதிவதனி (லதா) - 0091 805 693 6331

தகவல்:
மகள் - ரகுநாதன் ரோகினி (பிரான்ஸ்)

(CS/1155) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 09 . 1937



மறைவு 16 . 08 . 2024

### கிருஷ்ணசாமி பவானியம்மா

நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி பவானியம்மா அவர்கள் நேற்று (16.08.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - மாணிக்கம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும்,கிருபானந்தா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), கிருபானந்தி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராணி (ஆசிரியர்), ஶ்ரீகரன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி, ஆரூரன், பிரணவி, வைஷ்ணவி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற இலங்கைநாதன் (ஓய்வுநிலை அதிபர்), அன்னபூரணி, ஞானசௌந்தரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, சிதம்பரநாதன் (ஓய்வுநிலை பொலிஸ் அத்தியட்சகர்), சிவநாதன், பராசக்தி, கனகராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

521/9 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
நயினை கி.கிருபானந்தா
077 423 8064

(CS/1150) J-1

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### செல்வராணி பரராஜசிங்கம்

திதி : 17.08.2024 பூர்வபக்க திரியோதசி



ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தென்ன?
அன்னை உன் அன்புக்கு ஈடாகுமா?
அன்றலர்ந்த செந்தாமரையே அக்கம்மா - உன்
அன்பு முகம் காணாது வாடிப் போகின்றோம்.
பேரக்குழந்தைகளே உன் பேருலகம் - ஆனால்
பேசிடாமல் நீ வேற்றுலகம் சென்றதேனோ?
தேடிவந்தோர் துயர் தீர்ப்பீர், பசி தீர்ப்பீர்
தேனாகப் பேசித் தேற்றிடுவீர் - உம்மை
தேடித் தேடியே தேம்பி அழுகின்றோம்.
ஓராண்டு இன்று ஓடி மறைந்ததம்மா
ஓராயிரம் ஆண்டானாலும்
மாறாது உங்கள் நினைவு
உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS/1140) J-1

இல. 15, ஆடியபாதம் வீதி
கல்வியங்காடு.

என்றும் உங்கள்
நினைவுகளுடன்
குடும்பத்தினர்

மலர்வு 05.04.1949

மறைவு 28.08.2023

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு கணக்கெடுக்கும் 3 ஆம் கட்டப் பணிகள் தொடர்பான செயலமர்வு கிளிநொச்சியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. செயலமர்வில் புள்ளிவிவரவியல் மற்றும் தொகைமதிப்புத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் குமாரி பிரேமலதா, கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், உதவி மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ச-25, 113)




## 'யூசிமாஸ்' மனக் கணிதப் போட்டி திருநெல்வேலி நிலையம் சாதனை

யாழ்ப்பாணம், ஓக. 17

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 'யூசிமாஸ்' மனக் கணித தேசிய மட்டப் போட்டியில் திருநெல்வேலி யூசிமாஸ் நிலைய மாணவர்கள் விருதுகளை வென்றனர்.

திருநெல்வேலி நிலையத்திலிருந்து 150 மாணவர்கள் பங்கேற்றதுடன் 80 மாணவர்கள் மெரிட் சித்தியை தனதாக்கியுள்ளனர். பி பிரிவில் திருவரன் கேஷிகன், ஈ பிரிவில் உதயகுமார் ரிஷ்வின் ஆகியோர் கிராண்ட் சம்பியன் விருதை வென்றனர். நி.அரோன்ஸ், ம. விதுஷியா, சு. ஹரிபிரசாத், ப. அருணேந்திரன், ச. தரணிகன் ஆகியோர் சம்பியனாகினர். (ச-25)





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வாராந்த ஒன்றுகூடல் விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி சாஜகான் பாத்திமா நுஸ்லா தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் விநோதினி சிறீமேனன் 'இளையோரை வழிப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு' எனும் தொனிப்பொருளிலும், ஆங்கில நெறி ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி 'இளையோரும் சமூகமும்' எனும் தொனிப் பொருளிலும் உரையாற்றினர். (ச-25, 66)









ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் யாழ். நகர் பகுதிகளில் அண்மையில் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன. (ச -25, 20, 27)

## செஞ்சோலைப் படுகொலை யாழ். பல்கலையில் நினைவு

யாழ்ப்பாணம், ஓக. 17

செஞ்சோலைப் படுகொலையின் 18 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொது நினைவேந்தல் தூபியடியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது ஒருநிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதோடு படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு, மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். (ச-45-66)

## இசை விழா

கிளிநொச்சி, ஓக.17

கிளிநொச்சி, வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய தமிழ் மொழி கலைத்திறன் போட்டிகளும் இசை விழாவும் பதில் அதிபர் எஸ். சுகந்தன் தலைமையில் கடந்தவாரம் நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம், முருகானந்தாக் கல்லூரியின் அதிபர் அ.பங்கையற்செல்வன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மணிமேகலை சண்முகராஜா, கிளிநொச்சி தெற்கு வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் பா.சிறிஸ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-22,13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனின் மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.17

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந்திருவிழாவின் பத்தாம் நாளான மஞ்சத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெறவுள்ளது. (45-66)

# சங்கிலியன் பூங்காவில் தெய்வீக சுகானுபவம்

யாழ்ப்பாணம், ஓக.17

நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்துடன் இணைந்து வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு வழங்கும் தெய்வீக சுகானுபவம் 10 நிகழ்வு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் இந்தியாவின் புகழ்பூத்த கர்நாடக இசைக் கலைஞர் கலாநிதி எஸ்.சௌம்யா கலந்துகொண்டு தெய்வீக சுகானுபவம் 10 இசைக் கச்சேரியை நிகழ்த்துவார். (ச-45-66)

# ஜனாதிபதி ரணில் பக்கம் தாவினார் அலி சாஹிர்!

கொழும்பு, ஓக. 17

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு ஆதரவை வழங்கியுள்ளார். (ம)

## பொதுத்...

தேர்தல்கள் ஆணையாளர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்ததாவது:- செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்கும் நபர், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நாடாளுமன்றத்தைக் கலைத்தால் இந்த வருடத்திலேயே பொதுத்தேர்தலை நடத்துவதற்கும் நாங்கள் தயாராகவே உள்ளோம்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்குச்சீட்டு மிக நீளமானதாக இருக்கும். 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆறு பேர் போட்டியிட்டனர். வாக்குசீட்டு ஐந்து அங்குல நீளமாக இருந்தது. 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 35 பேர் போட்டியிட்டனர் வாக்குசீட்டு 26 அங்குல நீளமாக இருந்தது. இம்முறை 39 பேர் போட்டியிடுகின்றனர் எனவே இம்முறை வாக்குசீட்டு 26 அங்குலத்துக்கும் அதிகமாகவே இருக்கும்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் தேர்தல் செலவுகளும் அதிகரிக்கும். 1982 ஆம் ஆண்டு ஆறு பேர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது ஒரு வாக்குப்பெட்டியினுள் 900 வாக்குசீட்டுகளைப் போடக்கூடியதாக இருந்தது. இப்போது ஒரு பெட்டிக்குப் பதிலாக மூன்று வாக்குப் பெட்டிகளை அனுப்ப வேண்டிய நிலை காணப்படுகிறது.

ஒவ்வொரு பெட்டியுடனும் ஒரு சிரேஷ்ட தேர்தல் அதிகாரியையும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரையும் ஒரு வாகனத்தில் அனுப்பவேண்டும். ஒரு வேட்பாளருக்கு இரண்டு கண்காணிப்பாளர்கள் என்ற அடிப்படையில் 39 வேட்பாளர்களுக்கும் 78 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படலாம். அவ்வாறு நியமிக்கப்பட்டால் இவர்களுக்கு எங்கே இடம் ஒதுக்குவது? என்ற விடயத்தையும் சிந்திக்க வேண்டியுள்ளது - என்றார். (அ-ம-6)

## தேர்தல்...

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பான நிபந்தனைகள், தேர்தல்கள் ஆணைக்குழுவால் கடினமாக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, சமூக வலைத்தள அவதூறுகள், பிளாஸ்ரிக் பயன்பாடுகள் என்பவற்றுக்கெல்லாம் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, ஜனாதிபதி வேட்பாளர்கள் செலவிடவுள்ள பணம் தொடர்பிலும் சில வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன.

இதன்படி, வேட்பாளர் ஒருவர் எவ்வளவு பணத்தைச் செலவிட முடியும் என்ற உச்ச வரையறை விரைவில் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படவுள்ளது. அத்துடன், தேர்தல் பரப்புரைக்கான நிதி எப்படிக் கிடைக்கின்றது என்பது உள்ளிட்ட விவரங்களையும் வேட்பாளர்கள் வெளியிட வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்படவுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் நிதிநிலை அறிவுறுத்தலுக்கு முரணாகச் செலவு செய்யும் வேட்பாளர்கள் தொடர்பில், நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுமக்களுக்கு உரிமை உண்டு என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம)

## ரணிலுக்கு...

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம மற்றும் பௌசி ஆகியோரும் ஜனாதிபதிக்கு ஆதரவளித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். டலஸ் அணியில் இடம் பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதயன கிரிந்திகொடவும் ஜனாதிபதிக்கு நேசக்கரம் நீட்டியுள்ளார். (அ-ம-44)

## புலிகளின்...

நீண்ட அகழ்வுப் பணிகளின் பின்னரும் புதையல் எதுவும் மீட்கப்படாதயைடுத்து அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன. மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும், புலிகளின் ஆயுதங்களையும் புதையலையும் தேடி முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு அகழ்வுப் பணி தோல்வியில் முடிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## காஷ்மீர்...

உரையாற்றும்போதே காஷ்மீர், லடாக் எல்லைப் பிரச்சினைகளுக்கு நிகராக கச்சத்தீவுப் பிரச்சினை தொடர்பிலும் தமிழக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இந்தியாவில் பல சித்தாந்தங்கள் பிரிவினையை ஆதரித்தன. அதில், திராவிட சித்தாந்தமும் ஒன்று. வரலாற்று அடிப்படையில் கடந்த காலத்தை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். நாட்டுப் பிரிவினையின்போது பாரதம் வன்முறை நாடாக்கப்பட்டு, பல கொடூரங்கள் பிரிவினையின் பெயரால் நடந்தன. பாகிஸ்தான், ஜம்மு காஷ்மீரில் பெரும்பகுதியை ஆக்கிரமித்தது. அதை மறந்துவிட்டோம். 30 ஆயிரம் சதுரக் கிலோமீற்றர் அளவுக்கு சீனா ஆக்கிரமித்துள்ளது. கச்சத்தீவு உரிமையை விட்டுக்கொடுத்ததால் எமது மீனவர்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது

65 ஆண்டுகளாக பாரதத்தை ஆண்டவர்கள் சிந்தனையை உடைக்க நினைத்தனர். அனைவரும் ஒன்று என்பதே பாரதத்தின் சிந்தனை. நமது மதச்சார்பின்மையும், ஐரோப்பாவின் மதச்சார்பின்மையும் ஒன்றல்ல. எமது மதச்சார்பின்மை அனைவரும் ஒன்று எனச் சொல்கிறது. 1947ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரிவினை இன்னும் முடியவில்லை. தற்போதும் நடக்கிறது. இருப்பிடம், மொழி ஆகியவற்றின் மூலம் மக்கள் மனதில் பிரிவினையை உண்டாக்குகின்றனர் - என்றார். (அ-ம)

## இளைஞனின்...

கனடாவுக்குச் செல்வதற்காக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 20 இலட்சத்துடன், பயணித்தபோதே ஆனந்தராசா சஜீவன் (வயது-27) என்ற அந்த இளைஞர் காணாமற்போயிருந்தார். பின்னர் அவர் வவுனிக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது அவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார் என்று அறிக்கையிடப்பட்டது.

எனினும் இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. இதையடுத்தே, இளைஞனின் இறப்புக்கு நீதி கோரி அவருடைய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் இடம்பெற்றபோது, போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. தொடர்ந்து மல்லாவிப் பொலிஸ் நிலையம் முன்பாக ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிமறியலிலும் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு வந்த மல்லாவிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இளைஞனின் இறப்புத் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே விரைவில் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியை மக்களுக்கு வழங்கினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-ம-27)

## செட்டிகுளத்தில்...

காயமடைந்தவர்கள் தமது வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்த நிலையில், தாக்குதல்தாரிகள் அத்துமீறி நுழைந்து இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. காயமடைந்தவர்களில் மூவர் செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையிலும் ஒருவர் வவுனியா மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-110)

## இளைஞர்...

நல்லூர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து 40 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-23)

## கீரிமலை...

செயலாளர், மேற்படி ஆலய நிர்வாக சபையினர் மற்றும் அடியவர்கள் நேற்றுக்காலை அந்த ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஆலய முன்றலில் பொங்கப்பட்டதுடன், ஆலயச் சுற்றாடலில் அடியவர்கள் சிரமதான நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை - வாராந்தம் வெள்ளிக்கிழமை தோறும் மேற்படி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## மின்சாரம்...

ழுந்தவராவார். வவுனியா - ஓமந்தை ஆறுமுகத்தான்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டின் பின்புறமாக விலங்குகளுக்காக அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கியே அந்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ-ம-110)

## மைத்திரி...

சேனவிடம் தமது கட்சி ஆதரவு கோரவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனம் விற்பனைக்கு

2018 ம் ஆண்டு நிசான் எக்ஸ்ரயல் (Nissan x-trail) வாகனம் விற்பனைக்கு உள்ளது.
இடம் - யாழ்ப்பாணம்.

(CS/1153) J-1

தொடர்பு:- 076 693 2227

## கணிதம், வரலாறு

**09 - O/L, A/L வகுப்புக்கள்**

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான். தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம். (CS/1138) J-1

T.P. 077 482 5438

## வேலைவாய்ப்பு

நெல்லியடி வண்ணமயில் புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பழக விரும்பும் பெண் விற்பனை உதவியாளர்கள் தேவை.

(CS/28715) J-1

077 084 2051

## மணமகள் தேவை

1985ம் ஆண்டில் பிறந்த (V) கனடா குடியுரிமையை கொண்ட (Canadian Citizen) விவாகரத்து பெற்ற உதயச் செவ்வாய் மணமகனுக்கு, **மணமகள் தேவை.**

(CS/55947) J-1

075 538 9986, 077 360 5714


# லிட்ரோ சேவை விஸ்தரிப்பு



கொழும்பு, ஓக.17

லிட்ரோ நிறுவனம் தனது சேவையை நாடளாவியரீதியில் விநியோக மையங்கள் ஊடாக விஸ்தரிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி முடித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். தற்போது லிட்ரோ நிறுவனம் 45 இலட்சம் வீடுக ளுக்கும், 16,000 உணவகங்கள் மற்றும் விடுதிகளுக்கும், 6000 நடுத்தர மற்றும் பெரியளவிலானவர்த்தக நிலையங்க ளுக்கும் தனது சேவையை வழங்கிவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)


## அறை பராமரிப்பாளர் தேவை

நாவற்குழியில் உள்ள விடுதியில் தங்கி நிற்கக் கூடிய அறை பராமரிப்பாளர் தேவை.
(வயது 19 - 40)
சம்பளம் : நாளொன்றுக்கு 1500/-

(CS/1158) J-1

077 104 1923, 077 991 2628

## வீடு வாடகைக்கு

கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்கள் நடாத்துவதற்கும் உகந்தது.
தொடர்புகளுக்கு:-

(CS/55944) J-1

077 248 7320

## பணிப்பெண் தேவை

நன்றாக உணவு சமைப்பதிலும், வீட்டை சுத்தம் செய்வதிலும் நல்ல அனுபவமுள்ள வீட்டுப் பணிப்பெண் யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டில் தங்கி வேலை செய்ய தேவை.

(CS/1145) J-1

076 287 8157

## தேவை

யாழ் நகரின் 3 km எல்லைக்குள் ஒருவருக்கு அறை வாடகைக்கு தேவை. (நல்லூர், திருநெல்வேலி விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:
077 516 0822

## தேவை

கட்டட நிறுவனமொன்றுக்கு அனுபவமிக்க பொருட்கள் கொள்வனவு செய்பவர் (purchasing officer) களஞ்சிய பராமரிப்பாளர் (store keeper) தேவை.

தொடர்புகளுக்கு:
076 760 0403

## பணிநிலை வெற்றிடம் செல்வா எலக்ரிக்கல்ஸ்-திருநெல்வேலி

01. விற்பனையாளர் (ஆண்கள்)
மின்சார பொருட்கள் தொடர்பான அறிவு மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்
02. கணக்குப் பதிவாளர்/ கணக்காளர் (இருபாலரும் விண்ணப்பிக்கலாம்)
க.பொ.உயர்தர வர்த்தகப்பிரிவு. கணனி தொடர்பான அறிவு இருத்தல் வேண்டும்.
முன் அனுபவம் மேலதிகத் தகைமையாக கொள்ளப்படும்.
19.08.2024 - 21.08.2024 காலை 10.00-12.00 மணி வரை சுயவிபரக் கோவையுடன் நேரில் சமூகம் தரவும்.

செல்வா எலக்ரிக்கல்ஸ்
இல 21 பலாலி வீதி
திருநெல்வேலி

தொடர்புகளுக்கு:
077 160 2771


**மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தால் மாணவர்களுக்கு விசேட கருத்தரங்கு**

யாழ்., ஓக. 17

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் புலமை பரிசில் மாணவர்களுக்கு நடத்தும் விசேட கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 12 மணிவரை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் தலைமை அலுவலக கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-125)


## வேலைக்கு ஆட்கள் தேவை

**வெதுப்பகத்திற்கு - சுன்னாகத்தில்**

➤ விற்பனைக்கு
➤ உற்பத்திக்கு
➤ வாகன ஓட்டுநர்

(CS/1152) J-1

077 310 0128

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

**குறிப்பு:** இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



**ஆர்க் .என். கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020



(CS/55948) J-1

Hotline: 071 535 7799 / 071 973 9917



ஓம் சாய் ராம்

## காணி விற்பனைக்கு



➤ யாழ்ப்பாணம் கரைநகர் மற்றும் நாவலர் வீதிக்கு செல்லும் சந்தியில் யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று கிலோ மீற்றர் (3km) தூரத்தில் அமைந்துள்ளது.
➤ காரைநகர் பிரதான வீதி முகப்புடன் 78 (எழுபத்தெட்டு) பரப்பு காணி பாதையுடன் விற்பனைக்கு உண்டு
➤ பிரதான பாதையுடன் முன்பக்கம் 11 (பதினொரு) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
➤ பின் பக்கப் பாதையுடன் தேவையான அளவு காணி பிரித்துக் கொடுக்கப்படும்
➤ திருமண மண்டபங்கள். அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்:-**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

தொடர்புகளுக்கு:- ஓம் சாய் ராம்
077 676 3409, 074 120 5961


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 . 03 . 1962 | 09 . 08 . 2024 |

## சாந்தினி திருவாதவூரன்

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, சுன்னாகம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தினி திருவாதவூரன் அவர்கள் கடந்த 09-08-2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கல்லூரி அதிபர் தம்பையா கனகரத்தினம் - இராஜலக்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வியும், Rotarian மார்க்கண்டு திருவாதவூரனின் (சட்டத்தரணி, முன்னாள் கணக்காளர் - ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், தலைவர் சுன்னாகம் ஸ்ரீசத்திய சாய் நிலையம்) மனைவியும், காலஞ்சென்ற கல்லூரி அதிபர் ஆறுமுகம் மார்க்கண்டு - மற்றும் தவமணி (UK) தம்பதியரின் பாசமிகு மருமகளும், கனிஸ்கா கௌரிகரன் (UK), திருவாதவூரன் சங்கராத்மஜன் (UK) ஆகியோரின் அருமைத் தாயாரும், தாமோதரம் கௌரிகரனின் (UK) அன்பு மாமியாரும், றியா (UK), றிஷான் (UK) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மார்க்கண்டு சிவநேசன் (Nee தீனதயாளன் - Australia), பக்தவத்சலா கெங்காதரன் (UK), மார்க்கண்டு ஆலாலசுந்தரன் (UK) மார்க்கண்டு கௌரிகரன் (UK) ஆகியோரின் அருமை மைத்துனியும், அரியநாயகம் லிங்கேஸ்வரன் (UK), கௌரி ரவீந்திரன் (Australia), தர்மினி குகானந்தன் (Australia) வாசுகி ஜங்கரன் (Colombo) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுன்னாகத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**மார்க்கண்டு திருவாதவூரன்**
**(கணவன் )**
**076 774 3991**

**210, கே.கே.எஸ் வீதி**
**சுன்னாகம் வடக்கு,**
**சுன்னாகம்.**

(CS/55950) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org